Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

“கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக”

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி ஞு சித்திரை மீ ௩௧௨ (14-5-39) { இல. 29

1934

இளைஞர் மகாநாடு

ஈழகேசரி இளைஞர் சங்கத்தின் முதலாண்டு மகாநாடும் விழாவும் அடுத்து வரும் 20-ம் தேதி சனிக்கிழமை நடக்க விருக்கிறது. தமிழ் மாணவ உலகில் இத்தகைய நிகழ்ச்சியில் இதுவே முதல் தடவை யென்பது யாவரும் அறிந்த விஷயம். சென்ற ஒன்றரை வருடகாலமாக ஈழகேசரியின் கல்வி அனுபந்தத்தின் மூலம் தமிழாசிரியர்களும் மாணவர்களும் பெற்ற நன்மைகளை யாம் இங்கே எடுத்துரைத்தல் மிகை. எமக்கிதுவரை கிடைத்த மதிப்புரைக் கடிதங்களும், உற்சாக மொழிகளும் இம்மாற்றத்தை வலியுறுத்தும். கல்வித்துறையில் தமிழ் மாணவரும் மற்றைய தேசத்து மாணவர்களைப்போன்று உலகானுபவங்களில் ஈடுபட்டு, கூட்டுறவு வாழ்க்கையின் நலங்களைப் பெற்று, தத்தமக்கிடையே நட்புரிமை பூண்டு வாழவேண்டுமென்பதே எமதுகொள்கை. இதனை நிறைவேற்றஎழுந்தது கல்விஅனுபந்தம்.

கல்வி அனுபந்தத்தில் தொடர்பாய் எம்மால் நடாத்தப்பட்டு வந்த இளைஞர் சங்கம் தமிழில் புதியது. ஆங்கிலப்பத்திரிகைகளில் நடந்து வரும் சங்கங்களைப் போன்றதெனினும், இப்படி மகாநாடு கூடுவதும், பேச்சுப்போட்டி பரிசளிப்பு நடத்துவதும் தமிழில் முதல்தடவை யென்று கூறலாம். தமிழில் கல்விக்கழகங்கள் பெருகவேண்டும். கூட்டுறவு மிக வேண்டும். அப்பொழுதுதான் கலையாக்கத்துக்கு உயிர் வரும்.

இன்று இலங்கையின் கல்வி நிலையானது பெரிய நெருக்கடியான கோலத்தை யடைந்திருக்கிறது. அரசாங்கத்தில் கல்விக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட செலவுத் தொகையும் இனிமேல் சிக்கன சபையாரால் குறைக்கப்படப் போவதாகத் தெரிகிறது. ஆசிரியர் சம்பளவிகிதங்கள் திடீரென வீழ்ச்சியுறப் போகின்றன. இது நாட்டின் சுதேசமொழிகளில் கல்வியைப் பாதிக்கும் தன்மையது. தேசீயக்கல்விக்குப் பங்கத்தை யுண்டு பண்ணத்தக்கது. இத்தகைய போக்கையும் சிக்கன சபையாரின் சிபார்சுகளையும் எதிர்த்து ஆசிரியர்கள் வாதாட ஒரு சில ஆசிரியர்கள் இதனை ஆமோதித்துப் பேசுவதுதான் வியப்பைத் தருகிறது.

இந்த நிலைமையில் நமது இளைஞரின் கல்வி மகாநாடு கூடுகின்றது. அவர்கள் எழுச்சியும் கல்வியுலகில் ஓர் முக்கிய மாறுதலைக்கொண்டு வருமென்பதற்கையமில்லை.

ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஒருங்கே உதவி புரிந்து வந்த எமது கல்வி அனுபந்தத்தில் இதுவரைகாலமும் பல அன்பர்கள் கட்டுரைகள் வரைந்து எம்மை ஊக்கப்படுத்தி வந்தனர். எனினும் எம் நாட்டில் இன்னும் எத்தனையோ சிறந்த எழுத்தாளர்கள் தங்கள் சொந்தத் திறமையைத்தானும் உணராதிருக்கின்றனர். இவர்கள் இனி வரப்போகும் வருடத்திலாவது தங்களுக்கும் மற்றையோருக்கும் நன்மை புரியுமாறு கட்டுரைகள் எழுதி வருவார்களென்பது எமது நம்பிக்கை.

மகாநாட்டிலன்று கல்வி அனுபந்தத்தின் திரண்ட ஆஸ்தியாக முதல்முதல் ஓர் ‘கல்வி மலர்’ வெளியிடப்பெறும். இம்மலரில் பல அரிய கட்டுரைகள் பிரபல எழுத்தாளர்களால் வரையப்பட்டிருக்கின்றன. இவர்களுள் இந்தியாவில் சாஸ்திரக் கலைகளை விளக்கி யெழுதுவதில் ஒப்பற்ற தீரரான ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமியும் ஒருவர். மற்று இலங்கை வித்தியாதரிசிகளின் விசேஷகட்டுரைகள், தமிழ்த்தாத்தா டாக்டர் சாமிநாதையரின் ஆசீர்வாத மொழிகள் முதலியன அழகுபடுத்துகின்றன. தமிழாசிரியர்மாராலும் மாணவராலும் இப்புது மலர் உவந்தேற்றுக்கொள்ளப்படு மென்பதே எமது நம்பிக்கை.

மேல் வகுப்புகளுக்கு இலக்கியம் படிப்பித்தல்

(திரு. போ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்)

இலக்கியம் ஏனைய கலைகளிலும் சுவை தருவதொன்றாகையால் இதனை யாவரும் விரும்புதல் இயல்பு. அட்சர, கேத்திர கணிதமாதிய பாடங்கள் தமிழ்ப் பாடசாலையை விட்டு, தொழிலாதிய பல துறைகளிலிறங்கு வாருக்குப் பிற்கால சீவியத்தில் உதவுவதில்லை. இலக்கியம் இதற்கு நேர் மாறானது. பாடசாலைக் கல்வி யளவோடு நின்று விடாது மேலும் மேலுந் தாமாகவே பல நூல்களையும் படிக்கும் ஆர்வமுடைய பலரை நாம் இன்றுங் காணலாம். எனவே பாடசாலை இலக்கு மாணவன் பிற்காலத்திலும் இலக்கிய நூல்களைச் சுவைக்கவும், படிக்கவும் வித்திடுதலே.

மாணவனுக்கு இலக்கியச் சுவை யூட்டும் ஆசிரியன் தானே அச்சுவை மிகுதியுமுடையவனாய் அதன் பல துறைகளிலும் பரந்துபட்ட அறிவுடையவனா யிருத்தல் இன்றியமையாதது. அப்போதுதான் கடுமையான இலக்கியப் பகுதிகளைச் சுலபமாகவும், சுலப பகுதிகளை உளச்சுவை, மெய்ப்பாடு ஆதிய தோற்றவும் விளக்கி மாணவனுக்கும் சுவைக்கும் சக்தியை ஏற்படுத்துவான்.

செய்யுளைப் படிப்பிக்கும் ஆசிரியன் கவனிக்கவேண்டியன:—

1 (அ) ஒரு இலக்கியத்திலிருந்து சில செய்யுள்கள் படிப்பிக்க நேரிடின் சரித நிகழ்ச்சிகள் கூறுமாற்றால் அஷி செய்யுள்களில் முன்பின் தொடர்பு விளக்கல். அச்செய்யுள்கள் இராமாயணத்துள்ளனவாயின் கம்பனின் கதைப் போக்கில் அவன் கவிதைச் சித்திரங்கள் சம்பூரண சௌந்தர்யத்தோடு இலங்குவதை மாணவருக்கு எடுத்துக் காட்டலாம்.

நூலாசிரியன் சரிதம் விளக்கல்.

முழு நூல்களையுந் தொகுத்து நோக்கி அதன் நல்லியல்புகள் கூறல்.

(ஆ) இயற்கை வருணனையோடு கூடிய ஏதாவதொரு நிகழ்ச்சியைக் கூறும் பாவாயின் (‘வண்டானந்திரிதடத்து’ எனவரும் பாரதச் செய்யுள் போன்றதாயின்) களன் (Back-ground) விளக்கல். அஷி இயற்கை வருணனைக்கும் பாக்குறிக்கும் நிகழ்ச்சிக்குமுள்ள தொடர்பு விளக்கல் இன்றியமையாதது.

(இ) படிக்க எடுத்துக் கொண்ட செய்யுள்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள தொடர்பு காட்டல். (உ-ம்: நளவெண்பாச் சுருக்கம் 16-ம் பாவில் தமயந்தியின் அழகு கூறியது வாயிலாய்த் தமயந்தி மீது நளனைக் காதல் கொள்ளச்செய்த அன்னம், 17-ம் பாவில் அவள் கொடை விதர்ப்பன் பெற்ற கொம்பாகையால், அவனுக்குக் கொடுக்கப்படுவாள் ளெனக் குறிப்பாகக் கூறி 18-ம் பாவில் தமயந்தியும் அவனைப்போல் அரசாளும் அனுபவமுடையாள் (அவள் ஆளுவது பெண்மையை) எனப் பொருத்தங்காட்டி 19-ம் பாவில் அத்தகையாள் வெண்டால் விருத்த உலகாள் நளன் அதனைப் பார்த்திருத்தல் பொருத்த மற்றதென அவன் அவளை அடைய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தலை மாணவருக்கு விளக்கித் தொடர்பு காட்டலாம்.)

(ஈ) ஒரே செய்யுளின் சொற்கள் ஒன்றோடொன்று மிக இயைபுற்றுச் செல்லலை விளக்கல்:- (உ-ம்: ‘செம்மனத்தான் தண்ணளியான்’ எனவரும் நளவெண்பாப் பாவில் முதற்கண் தமயந்திக்கு யாரோ இயைபில்லாத ஒருவனைப் பற்றிக் கூறத் தொடங்குவதுபோ லாரம்பித்து, அன்னவன் குணநலம் விளக்கி பின் அவன் ஓர் அரசனென அவளுக்கு அவனை மிக அண்மையனாக்கி, அதைத் தொடர்ந்து அவன் மனங்கவரும் வகை அவன் அழகு மிகுதி விளக்கி; மேல் அத்தகையானே நளன் என அறியச் செய்து, இறுதியில் அவனே அவளுக்கு உரியான் என இருவரிடைக் கிடந்த உரிமையையுந் தெளிவிக்கு முறையில் அப்பாவின் சொற்கள் அமைந்து கிடக்கும் இயைபைக் காட்டி, அன்னத்தின் சாதுரியப் பேச்சை விளக்கு முறையால் இப்பாவை மாணவர் சுவைக்கும்படி செய்யலாம்.

(உ) சொற்கள் உச்சம் பெற்றுப் பொருட்செறிவுடன் செல்லலை (Climax) விளக்கல். (உ-ம். இராமாயணம் வனம்புகுபடலம் ‘வெய்யோனொளி தன் மேனியின் விரிசோதியின் மறைய’ என்னும் பாவின் 3-ம் அடியிலுள்ள ‘மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ’ எனும் சொற்கள் நாலும்.

மகாபாரதம் பதின்மூன்றும் போர்ச்சருக்கும் 239, 240-ம் பாக்கள்).

2. பாவின் பொழிப்புரை கேட்டல்.

3. பதவுரை விளக்கல்.

4. வினைமுடிபு காட்டல்.

5. விசேடணமடுத்த விசேஷங்களை மாணவர் இரண்டொரு சொல்லால கூற ஏவல்:- (உ-ம்: ‘வண்டானந் திரிதடம்’ எனும் பாவின்’ கண்டாளக் குமரனைத்தங் கொடிக்கயலைப் புறங்காணுங் கண்ணினளே’ என்ற இறுதியடிக்கு, சித்திராங்கதை கண்டாள் என மாணவர் விடைதரின் போதுமானது).

6. விசேடணங்கள் விளக்கல்.

7. செய்யுளிடைக்கிடந்த குறிப்புப் பொருள், சந்தர்ப்பத்திற் கேற்கக் கவி சொற்களமைத்தல் ஆகிய இரண்டையும் விளக்கல். (உ-ம்: நளவெண்பாச் சுருக்கம் 30-ம் பா ‘போதில் பெடையோடு வண்டுறங்கு நீர் நாடன்’ என்றதில் நளனுந் தமையந்தியும் ஒருவரையொருவர் அடைந்தின்புறல் குறிப்பாய் அமைந்திருப்பது

பச்சென்ற கொங்கைப் பசப்பியர்பா ழானமயல், நச்சென் றறிந்தருளே நண்ணுநாள் எந்நாளோ

விளக்கற் பாலது. இவ்வரியமைந்த சந்தர்ப்பம் விளக்காவிடிற் குறிப்புப் பொருளாற் பயனில்லை.)

இதுபோலவே முடிசூடலுக்குத் தடையெய்திய இராவிடிதலைக்,கம்பன் 'விரித்தபந்தர் பிரிந்ததாமென மீனொளித்தது வானமே' என்றதும் என்க.

8. படிப்பிக்கவெடுத்துக்கொண்ட செய்யுளின் சொற்கள் வேறுஇடங்களிற் பயிலுமாறு; அவற்றிற்கு உரையாசிரியர் கொள்ளும் பொருள். (உ-ம்: சென்ற வருட J. S. C. இலக்கியப்பா. 'உன்னிரை தெவிட்டிப் பல்லேய் உவந்தன குனிப்ப' என்றதில் வரும் 'ஓங்குவான்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'அகல்வான்' என்ற தொடருக்கு விளக்கும் பொருளும், இறையனாரகப்பொருளுரையாசிரியர் 'மலைந்தார் விழிஞத்து விண்போய் ஏறுந் திறங்கண்டகோன்' என்ற விடத்துக் கூறிய பொருளும் மிக இயைபுடையனவாய்ப் பொருள் சிறப்பித்தலை மாணவருக்குக் காட்டின் அவர்தாமே இலக்கியஞ் சுவைக்கவும், உரையாசிரியர்கூறும் பொருள் நுட்பங்களைத் தேடிப்பிடித் தின்புறவும் தூண்டப்படுவார்).

9. ஒரு விஷயம் பல புலவர்களால் வருணிக்கப் படுமாறு. (உ-ம்: 'மல்லிகையே வெண்சங்கா வண்டூத' என்ற களவெண்பாப் பாவுடன், 'நந்த நந்தவனங்களின்' என வரும் கம்ப சித்திரத்தை ஒப்பிடல் ஏற்றது.)

10. சந்தர்ப்பத்திற்கேற்ற செய்யுள் நடை. (யுத்தம், காதல், வீரம், சோகம் ஆகியவற்றிற்கு ஏற்ப நூலாசிரியர்கள் அமைக்கும் சொற் சந்தத்தால் மாணவர் மனதில், பொருள் தானாகவே தோற்றும் பான்மை. Onomatopaeia-சொற்சப்த சித்திரம். 'பொன்னுடையரேனும்'. என்ற முதலையுடைய களவெண்பாப் படிக்கும் போது குழந்தை மெல்லடியிட்டு நடை பயில்வது போன்ற உணர்ச்சி தருஞ் சொற்கள் இதற்கு தாரணமாம்.)

ஏற்ற இடங்களில் ஆசிரியர் இலக்கணத்தை இலக்கியத்துடன் சேர்த்துப் படிப்பித்தல் இன்றியமையாதது. 'தீவாய் உழுவை கிழித்தது' (திருக்கோவை 72.) என்பது தரும் மூன்று பொருளும் விளங்குதற்கு வேற்றுமை உருபு பொருளறிதல் மிக அவசியம்.

'முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி' என்பது போன்ற திருவாசகச் செழுஞ் சொற்றொடர்கள் மாணவரின் சொல்லாட்சிக்குப் பெரிதுந் துணை செய்வன என்பது சொல்லாதேயமைதலால் ஆசிரியர் நல்ல சொற்றொடர்கள் காட்டிப் பொருள் விளக்கல் அவசியம்.

ஆசிரியர் கிழமையில் 45 நிமிடம் பொது இலக்கியம் படிப்பித்தற்கெனப் பிரத்தியேக மாக்கிச் சுவைதரும் பாக்களை வகுப்பின் தகுதி நோக்கிப் படிப்பித்தால் பாடசாலைப்பயனைப் பிற்கால வாழ்க்கையில் நன்கு ஒவ்வொரு மாணவனும் காண்பான். இக்காலத்தில் (45 நிமிடத்தில்) ஆசிரியர் செய்யக்கூடியன:-

மனோன்மணீயம் போன்ற (ஷெ இலக்கியம் 3-ம் அங்கம் 2-ங் களம், 3-ம் அங்கம் 4-ங் களம்) பிற்கால இலக்கியங்கள் மூலம் நா. சி. சாஸ்திரத்திற்கும், இலக்கியத்திற்குமுள்ள தொடர்பை விளக்கி இலக்கியம் ஏனைய கலைத்துறைகளினு மாட்சிபுரிதலைத் தெளிவாக்கி ஏனைய பாடங்களையும் இலக்கிய மூலம் சுவைபெறவும் தொடர்புறவுஞ் செய்தல்.

கலைமகளில் வெளிவந்த 'பாலைமலர்கள்' (பிரபல எழுத்தாளர் T. N. குமாரசாமி யவர்கள் மொழிபெயர்த்தது) என்ற கதையைப் படிக்கும் மாணவன் கதைச் சுவையில் மனம் பறிகொடுத்து, சூறுவளிக்காற்றின் கொடுமையையும், நேரே அறிவது போன்ற அனுபவ மெய்தப் பெறுவான். எனவே ஆனந்தவிகடன், (இதன். அட்டைச்சித்திரமும் இலக்கியங் கற்பித்தலுக்கு நல்ல சாதனம்) கலைமகளாதிய பத்திரிகைகளை மாணவர் வாசிக்க ஏவி அவருடைய இலக்கியச் சுவையைப் பெருக்கல்.

பிற்காலத்திற் பாரதியார் மூலந் தோற்றிய இலக்கியக் கிளர்ச்சியை (புதிய, எளிய எண்ணங்களைச் சுலப வழியிற் கவிதையுடை புனைந்து வெளிவரச்செய்தமையை) ஆசிரியர் நன்கு பயன் படுத்தல். (மாணவர் சுலபநடையிற் பெருங்கருத்தை வெளியிட ஆசிரியர் உதவி புரிதல்)

மாணவரது தரத்திற்கு ஏற்ப வாசிகசாலை நூல்கள் தெரிந்து கொடுத்தல். துவிபாஷா பாடசாலைகளில் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கவிகளை மூலத்திலும் மொழி பெயர்ப்பிலும் வாசிக்கச் செய்து மொழிபெயர்ப்பின் இயல்பை விளக்கல்.

(உயிர்வாழ் உத்தமகவி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் யாத்த 'மலரும் மாலையும்' எனும் நூலிதற்கு மிக ஏற்றது.)

தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனைப் பரீக்ஷா புத்தக சபையாரால் 3-3-36 ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட்பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

உந்திச் சுழியால் உளத்தைச் சுழித்தகன, தந்தித் தனத்தார் தமைமறப்ப தெங்ஙனோ

அழைப்பு

நிகழும் பிரமாதி ஹூ வைகாசி மீ 7-ந் தேதி (20-5-39) சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம், ஈழகேசரி இளைஞர் சங்கத்தின் முதலாவதாண்டு மகாநாடும் விழாவும் வண்ணார் பண்ணை வைத்திஸ்வர வித்தியாலய மண்டபத்தில் கொண்டாடப்படும்.

அத்தருணம் சங்க அங்கத்தினரும் நண்பர்களும் பெற்றோர் ஆசிரியர்மாரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

காலையில் தலைவருரையும், பேச்சுப் போட்டியும்; மத்தியானம் விருந்தினர்க்குப் போசனம்; சங்கீதம்; மாலையில் பிரசங்கங்கள், பரிசளிப்பு, நன்றிகூறல்.

—"தர்த்தா"

கண்ணைக் கவரும் கல்வி மலர்

இளைஞர் சங்க மகாநாட்டில் (20-5-39)-ல் வெளிவரும்

கட்டுரையாளரிற் சிலர்:

டாக்டர் உ. வே. சாமிநாதையர்
ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி B. A., B. L.
ஸ்ரீ W. R. வாட்சன்
ஸ்ரீ A. M. K. குமாரசுவாமி

மற்றவர்களை மலரிலேயே கண்டுகொள்ளுங்கள்! எல்லாம் புகழத்தக்க கட்டுரைகள், கதைகள். ஆசிரியர் மாருக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

விலை சதம் 50 தான்

தபாலில் கிடைக்க விரும்புவோர் 66 சதம் அனுப்பவேண்டும்
பார்சலில் 75 சதம்

அதிபர், ஈழகேசரி இளைஞர் சங்கம்
சுன்னைகம்.

அவளுடைய அன்பு

[எஸ். முருகானந்தன்]

மறுநாள் பொங்கற் பண்டிகைதான். ஊரெங்கும் மிக ஆரவாரமாய்த்தானிருந்தது. ஆனால் நமது தேவானைக்குமட்டும் ஒன்றிலும் கவனம் செல்லவில்லை. அவளுடைய அருமைச் செல்விதான் நேற்றுத் தொலைந்துவிட்டாளே! அதனை இழந்தபின் பண்டிகையும் வேறு வேண்டியிருக்கா?

* * *

தேவானை ஒரு குடியானவனின் மகள். அவளுடைய தந்தை கறுப்பன். மாட்டுமந்தை வைத்துச் சீவிப்பவன். அவன் ஓர் கொடியவனுமன்றி, அபாரமாகக் குடிப்பவன். ஆனால் தேவானையோ சாந்தம் நிறைந்த ஓர் சற்புத்திரி. அவள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது, ஒருநாள் அவளுடைய ஆசிரியர் பசுவைப் பற்றிக் கற்பிக்கையில், "மிருகங்களில் அன்பாயிருக்க வேண்டும்" என்று கூறிய அமிர்த வாக்கியம் அப்படியே அவள் மனதில் பதிந்துவிட்டது. அன்றுமுதல் தேவானையே ஆநிரைகளை ஆதரிக்க ஆரம்பித்துவிட்டாள். அவைகளில் அத்தியந்த அன்பு வைத்திருந்தாள். இவைகளெல்லாம் இருந்தும் பயன் யாது? கறுப்பன்தான் இடறுகட்டைபோல் இருக்கிறானே. தினந்தோறும் அவன் கள்ளுக்கடைக்குச் சென்று வந்ததும் மாடுகளில் தான் ஆடுதல் செய்வது. கன்றுகளுக்குச் சிறிதளவும் பால் விடாது கறக்கும் ஓர் பாவி. மாடுகளைக் கண்டபடி தண்டிப்பான். அவைகள் யாது செய்யும்? தேவானையின் திருமுகத்தை நோக்கி அலறும். இந்த அநீதிகளைக் கண்ணுறும் தேவானை மனம் மிக வருந்துவாள், கறுப்பன் இல்லாத சமயம் பார்த்துக் கன்றுகளை அவிழ்த்துப் பால்காட்டி, அவைகளின் பசியை ஆற்றுவாள். தேவானை மாடு மேய்க்க ஆரம்பித்தநாள் முதல், பசுக்களெல்லாம் மிகுதியாகப் பால் சொரியும். தினந்தோறும் அவைகளை நல்ல புல் தரைகளுக் கழைத்துச் சென்று மேய்த்துத் தண்ணீர் காட்டி மிகவும் அன்புடன் போஷித்து வருவாள். அவள் மேய்த்துவரும் பசுக்களுள் 'லட்சுமி' என்ற மாட்டின்மேலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள். அதனிடம் அவளுக்கு அலாதிப் பிரியம். அப்பசுவும் தேவானையின்பேரில் மிகவும் அன்பு கொண்டிருந்தது. அவளைச் சிறிதும்விட்டுப் பிரியாது. அவள் பின்னாலேயே திரியும். தேவானையைக் காணாவிடில் அம்மா! அம்மா! என் அலற ஆரம்பித்துவிடும். 'மனப்பான்மையின் மாட்சிதான் என்னே!'

ஓர்நாள் காலை, கறுப்பன் பால் கறப்பதற்காகக் கன்றைச் சிறிது தூரத்தில் கட்டிவிட்டுச் செம்பு கொண்டு வருவதற்காகச் சென்றான். அப்பொழுது தேவானை அவ்விடம் வந்தாள். கன்று அவளைப் பார்த்துக் கத்தியது. தேவானையின் அகம் குழைந்தது. என்ன செய்வாள்! பாவிதான் பால கறக்கிறானே! முடியட்டும் என்று நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அந்தோ! அவ்விளங்கன்று பட்ட பாடுதான் என்ன! கயிற்றை இழுத்து எட்டிப் பார்த்தது. பயனில்லை. கடைசியாகக் கறுப்பன் பால் கறந்ததும் கன்றை அவிழ்த்து முன்பு நின்ற இடத்தில் கட்டிவிட்டுச் சென்றான். தேவானையின் மனம் பொறுக்கவில்லை. "ஏன் அப்பா? கன்றுக்குச் சிறிதேனும் பால் விடாது கறந்து செல்கின்றனையே! இது கடவுளுக்குத்தான் ஏற்குமா?" என்று கண்ணீர் ததும்பும்படி கறுப்பனைக் கேட்டாள். "அடி நீ யாரடி! எனக்குப் புத்தி சொல்பவள். உனக்கு ரொம்பத் தெரியுமா?" என்று சினந்துவிட்டு உள்ளே சென்றுவிட்டான். உடனே தேவானை சென்று கன்றை அவிழ்த்துவிட்டாள். பார்க்கவேணுமே அதனுடைய ஆனந்தத்தை. லட்சுமி தேவானையை மோந்து தன்னுடைய அன்புக்குறியை வெளிப்படுத்தியது.

பின் தினந்தோறும் கறுப்பன் எழும்புவதற்கு முன்னமே தேவானை எழுந்து லட்சுமியின் கன்றை அவிழ்த்து பால் ஊட்டுவித்துக் கட்டிவிடுவாள். கறுப்பன் முதலில் லட்சுமியினிடம் தான் பால் கறப்பதற்குச் செல்லுவான். அங்கு எவ்விதம் பால் இருக்கும்? உடனே லட்சுமிக்கு விழும் அடியும் உதையும். அது அலறுவதைவிட வேறு என்ன செய்யும்? கறுப்பன் அப்பால் போனதும் தேவானை லட்சுமியின் தேகத்தைத் தடவிக் கொடுப்பாள்.

தினந்தோறும் இப்படிக் கறுப்பனுக்குப்பால் கிடையாது போகவே லட்சுமியை யாருக்காவது விற்பதெனத் தீர்மானித்து விட்டான். இதை அறிந்த தேவானை இடியேறுண்ட சர்ப்பம் போலானாள், லட்சுமியைப் பிரிந்து இருப்பதிலும் இறப்பதே நலம் என்று எண்ணினாள். மறுநாள் காலை கறுப்பன் யாரையோ கூட்டி வந்து லட்சுமியையும் கன்றையும் அவிழ்த்துக் கொடுத்துவிட்டான். அவைகள் தேவானையை விட்டு அப்பால் போக மறுத்தன. தேவானை இதனைப் பார்த்துச் சகியாது அவ்விடம் நிற்காது ஓடிவிட்டாள். லட்சுமியும் கன்றும் வலோற்காரமாக இழுபட்டுச் சென்றன. அவைகளைக் கொண்டு சென்றவன் வாங்கிய இடியும் உதையும் அளவிறந்தன. எனினும் ஒருபடி கொண்டு சென்றுவிட்டான்.

இன்று பொங்கல் பண்டிகை. ஊரெங்கும் ஆரவாரம். வெடிகளின் சத்தம் ஒருபுறமும், சிறு பிள்ளைகளின் சத்தம் மற்றொரு புறமுமாக தேவானையின் செவிகளைத் துளைத்தன. ஆனால் அவளா இவைகளைக் கவனிப்பவள்! தெருவாசலில் வந்து நின்று அப்பாவிப்பசுவையும் கன்றையும் கொண்டு சென்ற வழி இதுதானோ என்று கலங்கிய வண்ணம் நின்றாள்.

திடீரென அம்மா! அம்மா! என்ற அலறல் சத்தத்தைக் கேட்ட தேவானை திடுக்கிற்றுத் திரும்பினாள். மதிமயங்கினாள். கண்களைத் துடைத் துடைத்துப் பார்த்தாள். ஆனந்தமேலீட்டினாள் ஆடினாள். ஓடோடியும் சென்று தஞ்சமெனை ஓடிவரும் லட்சுமியையும் அதன் கன்றையும் இறுகத்தழுவி முத்தமழை பொழிந்தாள் தன்னையேமறந்து ஆனந்த வாரிதியில் அமிழ்ந்தி விட்டாள்.

இவை யெல்லாவற்றையும் கண்ணுற்ற ஒரு வாலிபன். அம்மா! நம்ப எஜமானு இந்தப்பசுவை, விட்டுவரச் சொன்னாங்க. அது பால் சரியாய் தருகிறதில்லையாம்

(தொடர்ச்சி 232-ம் பக்கம் பார்க்க)

ஆழாழி யென்ன அளவுபடா வஞ்சநெஞ்சப், பாழான மாதர்மயல் பற்றொழிவ தெந்நாளோ.

பிரதாபக் கோட்டை!

[வ. இ.]

விஜயசிங்கனும், பிரதாபனும் ஒருவரையொருவர் பிரியாத நண்பர்கள். விஜயசிங்கன் இராசபுத்திரன்; பிரதாபன் வேட்டுவக் குலத்தவன். ஆயினும் குலவேற்றுமையைக் கடந்த 'நட்பு' என்னும் பாசம் அவர்களிருவரையும் பிணித்திருந்தது. அந்த நட்பு பால்யத்திலேயே உண்டாய நட்பு; தெய்வச் செயலால் உண்டான நட்பு என்று கூடச் சொல்லலாம். அப்படியில்லாவிட்டால் பயங்கரத் தோற்றத்துடன், அருவருக்கத்தக்கதாயிருந்த அந்த வேட்டுவப் பையன்மீது அந்த இராசபுத்திரனுக்கு ஏன் அவ்வளவு விருப்பம் உண்டாயிற்று!

ஒருமுறை விஜயசிங்கனுடைய தந்தை வேட்டைக்குப் புறப்பட்டான். அப்பொழுது எட்டுவயதுப் பையனாயிருந்த விஜயசிங்கன், தானும் கூடவருவதாகப் பிடிவாதம் செய்தான். அரசன் மறுக்கமாட்டாமல் தனது தவப்புதல்வனாகிய விஜயசிங்கனை அழைத்துச் சென்றான்.

காட்டிலே, வேடனொருவனும் ஒரு வேட்டுவப் பையனும் செல்லுவதைப் பையன் கண்டுவிட்டான். முன்னொருபோதும் அவன் வேடர்களைக் கண்டதில்லையாதலால், அவர்களைப் பார்க்கப் பார்க்க விநோதமாயிருந்தது. அந்த வேட்டுப்பையன் மீதுதான் அவனுக்கு அதிக கவனஞ் சென்றது. அந்தப் பையன் அணிந்திருந்த தளிர் உடைகளும், பரட்டைத்தலையும், 'குறுகுறுத்த' பார்வையும் இராசகுமாரனை வசீகரித்து விட்டன. அந்தப் பையனும் ஆவலோடு இவனைப் பார்த்தான். அந்தப் பையனோடு விளையாட வேண்டுமென்று விஜயசிங்கனுக்கு ஆசையாயிருந்தது. அதற்காக அவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று தந்தையைக் கேட்டான். அதற்கு அரசன், "அவன் வேடன்; அவனோடு நீ விளையாடவாவது, வேண்டாம், கெட்டுப்போவாய், அன்றியும், அந்த வேடன் பையனை நம்மோடு விடவா போகிறான்?" என்று மறுத்தான். அதற்கு பிள்ளை சம்மதித்தால் தானே! ஈற்றில் அரசன் வேடனிடம் கேட்டு பையனைக் கூட்டிக்கொண்டு வந்தான்.

இராசகுமாரன் பிரதாபனோடு (பிரதாபனென்றது வேட்டுவப்பையனுக்கு இராசகுமாரன் வைத்த பெயர்.) மிக அந்நியோந்நியமாயிருந்தான். அவனில்லாத ஒவ்வொரு நிமிட வாழ்வும் விஜயசிங்கனுக்கு மதியில்லா வானம் போல் சந்தோஷமிழந்திருக்கும். உணவு உடை முதலியவற்றைக் கவனியாது ஒரு மூலையிலிருந்து கொள்ளுவான். எதிலும் மனம் செல்லாது. பிரதாபன் கூட இருந்துவிட்டால் அவனுடைய ஆனந்தம் சொல்லிமுடியாது. ஆடுவான்; பாடுவான், சந்தோஷமாய்ச் சம்பாஷிப்பான். நன்றாகப் படிப்பான். படித்தவற்றைப் பிரதாபனுக்கும் சொல்லுவான். எப்பொழுதும் மகிழ்ச்சி மயமாகவேயிருப்பான்.

பிரதாபனோடு மைந்தன் நட்புக் கொண்டதால் சந்தோஷமாயிருப்பதையும், பாடங்களைக் கவனமாகப் படிப்பதையுங்கண்டு அரசன் மகிழ்ந்தான். விஜயசிங்கனுடைய நன்மைக்காகவே பிரதாபனையும் நன்றாகப் போஷித்துக் கல்வி கற்பித்தான். பிரதாபன் வேடருக்குரிய தன்மைகளற்றவனாய் ஓர் அறிஞனாய் வரக்கூடியவனாய்க் காணப்பட்டான். அவர்களிருவருடைய நட்பைப்போலவே அவர்களுடைய கல்வியும் வளர்ந்தது.

தந்தை இறக்க விஜயசிங்கன் அரசுக்கு வந்தான். பிரதாபன் கல்வியறிவில் கரை கண்டவனாய், அரசனுக்கு ஒரு மந்திரி போலவும், தந்தை போலவும், உத்தம நண்பனாகவும் விளங்கினான்.

ஒருமுறை மொகலாய சேனைகள் வந்து விஜயசிங்கனுடைய ஜெயவர்த்தன புரியை முற்றிக்கை யிட்டுக் கொண்டன. விஜயசிங்கன், முற்றிக்கையை விடுவிக்கத் தன்சேனைகளையும் அனுப்பினான். இரு சேனைகளும் கடுஞ் சமர் புரிந்தன. விஜயசிங்கனுடைய சேனை மொகலாய சேனைகளை எவ்வளவுக்கெவ்வளவு அழித்த போதிலும், அவ்வழிவை நிரப்ப பின்னும் பின்னும் மொகலாய சைனியம் வந்துகொண்டே யிருந்தது. இதனால், மூன்று மாத காலமாக ஜெயவர்த்தனபுரிச் சேனை கடுஞ்சமர் புரிந்தும் மொகலாயப் படையை வெல்ல முடியவில்லை. ஈற்றில் விஜயசிங்கனே தன்னிடமிருந்த சேனைகளெல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு நாட்டுக்காகக் கடைசி யுத்தம் செய்யப் புறப்பட்டான். அப்பொழுது தனது மனைவியையும் மைந்தனையும் பிரதாபனிடம் ஒப்புவித்து, "நண்பனே! நான் எனது நாட்டுக்காகக் கடைசிப் போர் செய்யப்போகிறேன். திரும்பி வருவது நிச்சயமில்லை. ஆதலால் இவர்களிருவரையும் பகைவர் கொன்று விடாமல் பாதுகாக்க வேண்டியது உன் கடன்" என்று கூறிச் சென்றான்.

அரசன் போருக்குப் போன பின் இரண்டு போர் வீரர் அரண்மனை வாயிலுக்கு வந்தனர். அவர்கள் மொகலாய வீரர் ஜெயவர்த்தனபுரி வீரர்களைப் போல் வேடம் தரித்திருந்தனர். மொகலாய சேனாதிபதி இராணியையும் மைந்தனையும் கொன்று வரும்படி அவர்களை யனுப்பியிருந்தான்.

அவர்களிலொருவன் வாயிலுக்குச் சிறிது தூரத்தே நின்று கொண்டு தான் மொகலாயனென்பதை வாயில் காப்போனுக்குக் காட்டினான். உடனே காவல்வீரன் வாளை உருவிக்கொண்டு அவனை வெட்ட ஓடினான். அந்தச் சமையத்தில் மற்றைய வீரன் அரண்மனையுட் பிரவேசித்துவிட்டான். பிரவேசித்தவன், இராணியையும் மைந்தனையும் தேடிக்கொண்டு சீக்கிரமாகவே பிரதாபன் இருந்த அறைக்கு வந்துவிட்டான்.

அப்பொழுது பிரதாபன் இராணியை நிலச்சுரங்க வழியாக அவளுடைய தகப்பன் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மைந்தனை அனுப்புவதற்காக அவனுக்கு மாறு வேடமணிந்து கொண்டிருந்தான். "பையனைக் கொடுக்கிறாயா? அல்லது நீயும் கூடவே இறக்கப் போகிறாயா?" என்றான் அங்கே வந்த மொகலாயன். பிரதாபன் முதலில் திகைப்படைந்தான். பின்னர், தப்பித்துக் கொள்ள வழியேதுவென்று கடுகி ஆலோசித்தான். பையன், பிர

தூய பனித்திங்கள் சுடுவதெனப் பித்தேற்று, மாய மடவார் மயக்கொழிவ தெங்ஙனோ

தாப னுடைய கரங்களைத் தனது கரங்களால் பிடித்துக் கொண்டு பிரதாபனுடைய முகத்தை அண்ணாந்து நோக்கித் தேம்பி தேம்பி அழுதான். அப்பொழுது காவற்காரன் ஓங்கிய வாளுடன் ஓடி வருவதைக் கண்டான் பிரதாபன். "என்ன சொல்லுகிறாய்? பார்! முதலில் பையன். பின்னர் நீ" என்று கூறி, மொகலாயவீரன் வாளை வீசினான். 'தொப்' என்றொரு சத்தம்! 'பளிச்' என்றொரு மின்னல்! பிரதாபனுடைய தலை நிலத்தில் உருண்டது. பையன் முகங் குப்புற வீழ்ந்து கிடந்தான். அடுத்தகணம் இன்னொரு வாள் மின்னிற்று. மொகலாயனுடைய தலையும் உருண்டது. அங்கே வந்த காவல்வீரன் பையனைத் தூக்கிக் கொண்டு சென்றான்.

விஜயசிங்கன் மொகலாயரை அரிதில் வென்று, வெற்றி முழக்கத்துடன் அரமனைக்கு வந்தான். வந்ததும் வராததுமாய் தனது மனைவியினதும், மகனினதும் சேமத்தையறிய ஆவலோடு பிரதாபனுடைய அறைக்குச் சென்றான். அறையில் இரத்த வெள்ளமாயிருப்பதைக் கண்டு ஏங்கினான். அந்த வெள்ளத்தில் பிரதாபனுடைய பிணத்தைக் கண்டதும் 'ஓ' வென்று கதறினான். எத்தனையோ வீரர் யுத்தகளத்தில் மடியவும் கலங்காத மனம் கலங்கியது. பிரதாபன்மீது தான்கொண்ட அன்புதான் உருகிப் பாய்கிற தென்னும்படி கண்ணீர் பெருக்கினான். தான் யுத்த களத்திலேயே இறந்திருக்கலாகாதா வென்று வருந்தினான். அவனது நிலைமை எழுதி முடியாது.

பின், அப்பால நின்றோர் தேற்ற, சிறிது தேறி, தனது நண்பன் இறந்ததற்குரிய காரணத்தைக் கேட்டான். பையனைத் தூக்கிக் கொண்டுவந்த காவல்வீரன், மொகலாயரிருவருள் ஒருவன் தன்னை ஏமாற்ற மற்றவன் உள்ளேபுகுந்ததையும், பிரதாபனுடையகரங்களைத் தனது கரங்களால் பிடித்துக் கொண்டு அவனுடைய முகங்களை நோக்கித் தேம்பிக் கொண்டுநின்ற இராசகுமாரனை வெட்டும்படி மொகலாய வீரன வாளை வீச, பிரதாபன் சமயோசிதமாய் பையனை திடீரென இழுத்துத் தன்காலடியில் முகங்குப்புற வீழ்த்திவிட்டு, வீசியவாளுக்கு தன்னை இரையாக்கியதும், அப்பொழுது தான் மொகலாயனை வெட்டியதும் ஆகிய செய்திகளைக் கூறினான். தன் மகனுக்காகவே நண்பன் உயிர் நீத்தான் எனபதைக் கேட்டபொழுது அரசன் பின்னரும் ஆற்றொணாத் துயருற்றான். அத்துயர் நெடுங்காலமாக அவனுடைய சிந்தையை வருத்திக் கொண்டிருந்தது. அன்றுமுதல் அவனுடைய இருதயம் சந்தோஷமென்னும் தீபத்தை இழந்து துயர் என்னும் இருள் சூழ்ந்திருந்தது.

அரசன் பகைவரது நெடுநாளைய முற்றிக்கையில் சீர்கெட்டிருந்த நாட்டைச் சிறப்பிக்கவும், அரணசெய்யவும் தொடங்கினான். அதற்காக அவன், அழகியதும், பகைவர்களால் தாக்குதற் கரியதுமாகிய கோட்டையொன்றைக் கட்டுவித்தான். அந்தக் கோட்டைக்கு, தன் இருதய மாளிகையின் இன்ப ஜோதியாய் விளங்கிய பிரதாபனுடைய பெயரையே சூட்டினன். அந்தப் 'பிரதாபக் கோட்டை' தனது ஆருயிர் நண்பனின் குலமணியைக் காப்பாற்ற உயிர் நீதத பிரதாபனுடைய கீர்த்தியை விளக்கிக் கொண்டு இன்றும் திகழ்கின்றது!

வியாசம்

ஒருவன் தான்கற்ற அறிவைக் கொண்டு குறித்த விடயத்தைப் பற்றிய கருத்துக்களை வசன நடையில் விசாரிப்பது வியாசமெனப்படும். அக்குறித்த விடயம் சரித்திர சம்பந்தமாகவேனும் கட்டுக்கதையாகவேனும் சிந்தனைக் குரியதாகவேனும் ஒன்றைச் சுருக்கி அல்லது விரித்துரைப்பதாகவேனும் இருக்கும்.

எழுதும்பொழுது தூயசொற்களை புணர்த்தியும் வாசிப்பவர்களுக்கு விளங்கத்தக்க வகையாகவும் சிறுச்சிறு வசனங்களாகவும் எழுதப்படல் வேண்டும். வசனங்களிலே சொற்கள் அவாய் நிலையாலும் அண்மை நிலையாலுந் தம் பொருளை விளக்கு மாற்றலை உடையனவாதல் வேண்டும். அவாய் நிலையென்பது சொற்கள் கருத்துத்தோன்றும்படி அவாவி நிற்றலாம். அண்மைநிலையென்பது சொல்லின்பொருள் இன்னதென்று புலப்படுமாறு மற்றச்சொல் பக்கத்தில் நின்று பொருளை விளக்குவதாம்.

குறித்த விடயத்தின் பொருள்கள் இவை இவையென ஆராய்ந்து அவற்றை நிரைப்படுத்திப் பொருத்திமுடித்தல் வேண்டும். அப்படி நிரைப்படுத்தும்போது பொருள்களின் தகுதிக்கேற்ப அவை இடம் பெறுதல் வேண்டும்.

எந்த விடயத்தை எழுதும்போதும் அது இன்னது என்று வாசிப்போர்க்கு விளங்கும்படி அவ்விடயத்தை அறிமுகப்படுத்துதலையே முகவுரையென்பர். எழுதுபவர் அவ்விடயத்தின் பேரிற் சொன்ன கருத்துக்களை ஒவ்வொன்றாகப் பந்தி பந்தியாக நிரைப்படுத்தி எழுதும்போது முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என வகைப்படுத்தல்வேண்டும். அவ்வகைப்படுத்துதலையே பொருளின் தகுதிக்கேற்ப வகுத்தல் தொகுத்தல் என்பர்

மேலும், குறித்தபொருளைவிளக்குதற்கு வேண்டுஞ் சொற்களைக் குறைவாகஎடுத்தலும் அளவிற் கூமிஞ்சி எடுத்துப் பொருளில்லாது அரற்றுதலும்ஆகாவாம். முன்னர் வரைந்தவற்றையே பின்னர்வரைதலு 'முன்னர்' வரைந்தவற்றிற்கு மாறுபடும்படி பின்னர்வரைதலும் 'கூறியது கூறன் மாறுகொளக் கூறல்' என்ற குற்றத்தின் பாற்படும்.

சொற்களை வீணாக விரித்து வரையாது சுருக்கமாக வரைதலும், சுருக்கமாக வரைதலுடனேயே சந்தேகத்திற்கிடமாகாது விளங்க வைத்தலும் நல்ல சொற்களைச் சேர்த்து வாசிப்பவர்களுக்கு இன்பத்தைப் பயக்கத்தக்க விதமாகவும் வரைதலே வியாசத்திற்கு அழகாம். ஒரு பாத்திரத்துள்ளே (வாளியில்) நீர் நிறைந்திருக்கின்றது. அதன் அடித்தளத்தை நோக்கினால் மேலுக்கு (சமீபத்தில்) இருக்கிறதாகத் தோற்றும். ஆனால், அதனுள் கையை வைத்துப் பார்க்கும்போது ஆழமுடையதாகவே இருக்கின்றது. அதுபோலவே வியாசத்திலும் ஆழமுடைய கருத்துக்களமைந்த சொற்களை அமைத்து வரைந்து கொள்ளுதல் சிறப்புடைத்து.

மேற்கூறியவை எல்லாம் அடைய ஒரு விடயத்தை வரையலாமாயினும் நேரத்துக்குத் தக்கபடி குறித்த விடயத்தின் பேரில் எழுதப்பட வேண்டிய யாவையுந் திரட்டிச் சுருக்கியும் விரித்தும் வரைதலே பிரதானமாம்.

இ. செகசோதி
S. S. C. மாணவன், வீமன்காமம் துவிபாஷாபாடசாலை

ஏழைக் குறும்புசெயும் எத்திறையார் மோகமெனும், பாழைக் கடந்து பயிராவ தென்னாளோ

ஈழகேசரி இளைஞர் சங்கம்

குழந்தைகாள்!

20-ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் எங்கள் மகாநாடும் விழாவும் கொண்டாடப்படும். அத்தருணம் நீங்களெல்லொரும் நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்ருர் சகிதமாய் வந்து கூடுவீர்களென்று எதிர் பார்க்கிறேன்.

மகாநாட்டில் தாத்தாவைக் கண்டு கொள்ளலாம் என்று உங்களிற் பலர் எதிர் பார்க்கலாம். இந்த ஒரு விஷயத்தில்தான் எனது 'கலங்காத மனம் கலங்கி விட்டது. எப்படியாகத் தாத்தா உங்கள் முன் தோற்றப் படுவதென்பது பெரிய பிரச்சினையாய் விட்டது. தாத்தாவின் நீண்ட தாடியையும் வழுக்கைத் தலையையும் கண்டுவிட்டுப் பிறகு நீங்கள் வெறுப்புக் கொண்டு விடுவீர்களா, அன்றிச் சந்தோஷப் படுவீர்களா தெரியாது! இத்தனை பெரிய சங்கடத்தில், தாத்தாவை மகாநாட்டில் கண்டு பிடிக்கும் விஷயத்தை உங்களிலேயே விட்டு விடுகிறேன். 'தாத்தா அனமதேயப் பேர்வழி' என்று உங்களுக்கு நான் சொன்னது ஞாபகமிருக்கிறதா? ஆகையால் தாத்தாவின் பெயரை உங்களுக்குச் சொல்ல மாட்டேன். மகாநாட்டுக்குக் கட்டாயம் வருவார். ஆனல் பகிரங்கத்தில் தன்னைக் காட்டிக் கொள்ள மாட்டார். பாட்டிக்கு உடம்பு நல்ல சுகமில்லை. ஆகையால் அவள் அன்று மகாநாட்டுக்கு வர முடியாதென்னச் சொல்லிவிட்டாள். எனினும் அவளது அன்பான ஆசிர்வாதங்கள் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்ருள்.

இன்றைய நிலைமையில் தாத்தா பாட்டியின் புகைப் படங்களைக் 'கல்விமலரில் பிரசுரிக்க எண்ணியிருந்தேன். ஆனல் எங்களிடம் ஒரு சித்திரக்காரர் இருக்கிருர். அவர் அன்ருெரு நாள் ஆபீசுக்கு வந்த போது எங்களிருவரையும் அப்படியே "தனது கைத்திறமையால் படம் பிடித்து விட்டார்! அப்படங்கள் புகைப் படத்திலும் பார்க்க விசேஷமானவையாகக் காணப்பட்டதால் அவற்றையே 'கல்வி மல'ரில் பிரசுரிக்கிருேம். பேரன் பேத்திகள் கண்டு களிப்பார்களாக. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராய மென்ன?

இன்றையத் தினம் மாலை மூன்று மணிக்கு பேச்சுப் போட்டிக்கு 'விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பிய 21 பேர் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தேர்தலுக்குப் பிரசன்னமாகும்படி சீட்டுகள் அனுப்பப் பெற்றிருக்கின்றனர். தவருது வந்து சேர்வீர்களாக. இதில் தெரியப் படாதவர்கள் மகா நாட்டில் பேச இடங்கொடுக்கப்பட மாட்டார்கள் என்ற நிபந்தனை கட்டாயமானது.

—'தாத்தா'

தாத்தா பதில்

ச. வரதராசன், தம்பி, உமது கதை கல்வி மலரில் இடம் பெற்றிருக்கிறது, பேச்சுப் போட்டிக்கு இடைத் தேர்தலில் கட்டாயம் தோற்றப்படவேண்டும் விஷயத்தை வேண்டுமானல் மாற்றிக்கொள்ளலாம். உமக்குப் பதில் போட்டிருக்கிறேன். ஆம், தாத்தாவைத் தெரிந்துகொள்வது உங்கள் பொறுப்பு!

க. சுப்பிரமணியம், (283). ஏமாந்துபோனீர் தம்பி! நீர் தவறுதலாக எண்ணிவிட்டீர். இது யாருடைய சூதாகவோ இருக்கவேண்டும்! விஷயத்தைப்பற்றி இன்னும் முடிவு சொல்லமுடியாது. தாத்தாவை நீர் எவ்வளவுக்குக் கிளுமைவிருக்கிறீரோ அவ்வளவுக்கு இரகஸ்யமாக அன்பு அதிகரிக்குமல்லவா? நான் நீர் குறிப்பிட்ட இடத்திற்கு வரவில்லை.

எ பாலசுப்பிரமணியம், (247). உமது உருக்கமான கடிதத்தைப் பார்த்து மிகவும் விசனப்பட்டேன். உமது வேண்டுகோட்படி வியாசத்தை வாசிக்க இடந்தரப்பட்டிருக்கிறது. சுருக்கமாயிருக்கவேண்டும்.

சி. அரசரத்தினம். உமது பாரதியாரின் விஷயம் இடம்பெறும். பாட்டும் நன்ருயிருக்கிறது. அதையுங் காணலாம். இப்போது நீர் அனுப்பிய விஷயம் மிகவும் 'புராதன' கட்டுரையாயிருக்கிறது. காலப் போக்குக்கு இது 'கிழடாக'ப் போயிற்று!

சே. சிவனடியான், (256). உமது விண்ணப்பம் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமையால் அங்கீகரிக்கப்படவில்லை. இதையிட்டு வருத்தந்தான். என்ன செய்யலாம்! காலம் பிந்திவிட்டது. அடுத்த முறைகளில் பார்த்துக்கொள்ளலாம். நீர் கடைசியாக எழுதியது ஒரு சிறுபிள்ளைக் குற்றம். கடிதத்துக்குத் தக்க பதில்தான் கிடைக்குமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும்.

அவளுடைய அன்பு

(229-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொன்னன். இதைக் கேட்டதும் தேவானை முன்னிலும் பன்மடங்கு இறும்பூது எய்தி ஆமாம் இது கூடாதபசுத்தான். நம்முடைய தகப்பனுரும் இதை உங்கள் தலையில் கட்டி யடிக்கலாமென்றுதான் பார்த்தார் நீ போய் உன்னுடைய அலுவலைப்பார். நான் அப்பாவிடம் சொல்லிக்கொள்கிறேன் என்று அவனை அனுப்பினுள். தேவானை கவலை நீங்கிய வதனத்துடன் கன்றும் பசுவுமாக வருவதைக் கண்ணுற்று கறுப்பன் ஆச்சரியமடைந்தான். நடந்தவற்றை நவின்ருள் சிறுமி. எனினும் மறுநாள் ஒழுங்காகப் பால் தந்த லட்சுமியைப் பார்த்து சந்தோஷமடைந்தான் கறுப்பன்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" ததி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம 'தலையாட்டிய' ஊள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு மேசீ 14௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது